# அன்னை மரியாள் இறைவனின் தாய்
# புத்தாண்டுப் பெருவிழா
## திருவழிப்பாட்டு ஆண்டு A (01-01-2014)

### திருப்பலி முன்னுரை:

இறைத் திருமகன் இயேசுவின் இனிய நண்பர்களே சகோதரர்களே சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் வணக்கம் கூறி இன்று தொடங்கும் இந்தப் புதிய ஆண்டில் நலமும் வளமும் பெருகி இறை ஆசீரை நிறைவாகப் பெற்று வாழ வாழ்த்துகிறேன். இந்த நல்லநாளில் அன்னையாகிய திருச்சபை நாம் இறை ஆசீருடன் சீரும் சிறப்பும் பெற்று வாழ ஒரு சிறந்த கொடையை இறைவன் நம் அனைவருக்கும் தந்துள்ளதை நினைவுபடுத்தி அக்கொடையின் பயனால் இந்த ஆண்டு முழுவதும் நலமாய் நிறைவாய் வாழ நம்மைத் தூண்டுகிறது. அக்கொடைதான் இறைவனின் தாயாகிய தூய கன்னிமரியா.

எனவே இன்று சிறப்பான வகையில் சாதாரண மானுடப் பெண்ணான மரியா இயேசுவின் தாயானதால் இறைவனின் தாயான மாண்பினை பெருமையுடன் நினைவு கூர்ந்து இன்று விழா கொண்டாடுகிறோம். நேற்று இருந்தார் இன்றில்லை எனும் பெருமையுடைத்து இவ்வுலகு என்னும் சொல்லின்படி கடந்த ஆண்டு நம்முடன் இருந்த பலர் இன்று நம்முடன் இல்லை. ஆனால் நம் இறைவன் நம்மை நினைவு கூர்ந்துள்ளார். இன்று இப் புதிய ஆண்டில் நாம் அடியெடுத்து வைக்க அருள்கூர்ந்துள்ளார். இறைவனுக்கு தாழ்மையுடன் தன்னை முழுதும் ஈகம் செய்து மாண்புற்ற தூய கன்னிமரியாவைப் பின்சென்று இறைவனின் மக்களாக வாழ தொடர்ந்து ஒரு புது ஆண்டைத் நமக்குத் தந்து வாழவைத்துள்ளார். இப் புதிய ஆண்டில்:

- **புது உணர்வு கொள்வோம்.**
- **புது முயற்சிகள் மேற்கொள்வோம்**
- **புது உறவுகள் வளர்ப்போம்**
- **இறைவனுக்கு நன்றி உள்ளவராய் வாழ்வோம்**
- **நம்மைச் சுற்றியுள்ளவரை மனதார அன்புடன் வாழ்த்தி நலமாய் வாழ ஊக்கமூட்டுவோம்.**

அன்னைக்கு ஏற்ற பிள்ளைகளாய் ஆண்டு முழுவதும் இறை அருளிலும் அமைதியிலும் நிறைவுடன் வாழ்ந்திட வரம்வேண்டி இப்புத்தாண்டுத் திருப்பலியில் இணைவோம்.

## திருப்பலி முன்னுரை: 2

அன்பான இறைமக்களே இன்று நம் அனைவர்க்கும் மகிழ்ச்சியான நாள். ஏனெனில் கடந்த ஓர் ஆண்டாக எல்லா துன்பங்கள் மத்தியிலும் இறைவனுடைய அன்புகரம் நம்மை வழிநடத்தியது. அதற்காக நன்றி செலுத்த இந்த பலிபீடத்தை சுற்றி குழுமியிருக்கிறோம். இன்றைய திருவழிபாடானது அன்னைமரியாள் இறைவனின் தாய் என்கிற பெருவிழாவை சிறப்பிக்கின்றது. மனித வாழ்க்கையில் துன்பங்கள் போராட்டங்களும் நிச்சயம் உண்டு. ஆனால் கடவுளின் குழந்தைகளான நாம் நம்பிக்கையோடு அப்பா என்று அழைத்தவர்களாய் உரிமையோடு இறைவனை அணுகிச் செல்ல வேண்டும். அப்போது அவருடைய ஆசிரை வழங்கி நம்மை காப்பார். எனவே வருகின்ற நாட்களில் நம் அன்னை மரியாளைப் போல இறைவனின் அன்பையும் நன்மைத்தனத்தையும் மனதில் சிந்தித்தவர்களாய் வாழ முயற்சி எடுப்போம். அன்னையின் பரிந்துரையால் இறைபாலகனின் ஆசீர் பெற தொடரும் பெருவிழாவில் பங்கெடுப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**புதுமையின் பிறப்பிடமே எம் இறைவா எம்!**

திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் அனைவரையும் உம் பாதம் அர்ப்பணிக்கின்றோம். இவர்கள் அனைவரும் உம் மந்தைகளாகிய எங்களை சிறப்புடன் வழிநடத்த வேண்டிய ஞானத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மீட்பு வழங்கும் நாயகனாம் இயேசுவே,**

இப் புதிய ஆண்டிலே புதிய மனிதர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் இறையாட்சியின் மதீப்பிடுகளை உணர்ந்து அதன்படி அர்த்தமுள்ள புதுவாழ்வு வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!**

புதிய ஆண்டில் நாங்கள் செய்யும் தொழிலை ஆசீர்வதியும். எங்கள் குடும்பத்தில் சமாதானம் நிலவவும், எங்கள் செயல்கள் உமக்கு உகந்தவைகளாய் மாறவும், எங்கள் அருகில் வாழும் மக்களின் தேவைகள் நிறைவேறவும், தேவையான அருளைப் பொழிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். இவர்கள் உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும்: எமது பிள்ளைகள் இறையுறவிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்கி உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் மகன் குணமடைவான்“ தாயும் தந்தையுமானவரே!**

உம் சந்நிதானத்தில் உம் பிள்ளைகளாகிய நாங்கள் பல்வேறு தேவைகள் நிறைவேற வேண்டி நிற்கிறோம் ஆண்டவரே. நாங்கள் எப்போதும் உம் அளவற்ற அன்பை சுவைக்கவும் அதனை பிறருக்கு அளிக்கவும் வேண்டிய தாராள மனதை தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எங்கள் புகலிடமும் பலமுமாகிய இறைவா!**

இன்றைய நாட்களில் வேலை வாய்பின்றி, பொருளாதார நெருக்கடிக்குள் அகப்பட்டு அல்லலுறும் அனைவர் மீதும் இரக்கமாயிரும். அவர்கள் வெகு விரைவில் நல்லதொரு வேலையைப் பெற்றுக் கொள்ளவும் , அதன்மூலம் தங்களுடைய வருவாயைப் பெருக்கி மகிழ்ச்சியோடு வாழவும் , தங்களிடமுள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்து வாழும் மனப் பக்கு வத்தையும் அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.